# நாகர்கோவில் நகராட்சி

## 2013–14–ம் ஆண்டு

# <u>நிர்வாக அறிக்கை</u>

# நாகர்கோவில் நகராட்சி

## 2013 – 2014 – ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும் நாகர்கோவில், இந்தியத்துணைக் கண்டத்தின் தென்கோடியில் அமைந்த நகரமாக விளங்குகிறது. நாகர்கோவில் நகராட்சி 1920–ம் வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. அரசாணை எண். 1567 ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை நாள் 12–10–1978 – ன் படி தேர்வு நிலையாக உயர்த்தப்பட்டது. அரசாணை எண். 535 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள் 30–05–1988 – ன் பிரகாரம் சிறப்புநிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அரசாணை எண்.,281 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள் 09.11.2010 மற்றும் அரசாணை எண்.17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை (தேர்தல்) நாள் 14.01.2011–ன் படி இந்நகராட்சியுடன் ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை, வடக்கு சூரஙகுடி, காந்திபுரம் மற்றும் கரியமாணிக்கபுரம் ஊராட்சிகளையும் சேர்த்து 49.10 சதுர கிலோமீட்டர் அளவிற்கு எல்கை விரிவாக்கம் செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. கீழ்க்கண்டுள்ள வருவாய் கிராமஙகள் ( Revenue Village ) இதில் அடஙகி உள்ளன.

1. நாகர்கோவில்
2. வடசேரி
3. வடிவீஸ்வரம்
4. நீண்டகரை
5. மதுசூதனபுரம்
6. தர்மபுரம்
7. வேம்பலூர்

## பொதுப்பிரிவு

### 1. மக்கள் தொகை

20011–12–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மக்கள் தொகை 224329 ஆகும். இவற்றில் ஆண்கள் 110130 பெண்கள் 114197 மற்றும் மற்றவை 2 ஆகும்.

2. 2011 – ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது கீழ்கண்டுள்ளபடி மொத்தம் 52 வார்டுகளிலும் பல்வேறு பிரிவினர்களுக்கு கீழ்கண்டுள்ளபடி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

1. பெண்கள் தொகுதி (பொது) 18
2. தாழ்த்தப்பட்ட மற்றும் பழஙகுடியினர் 1 ( 1 பெண்களுக்கு )

3. பொதுவார்டுகள் 33

- ----

மொத்தம் 52

- ----

2. மன்றம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 25–10–2011 அன்று பதவி ஏற்றுக் கொண்ட நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்து இந்நகர்மன்றத்திற்கு தலைவர் பதவி பெண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருமதி மு.மீனாதேவ் அவர்கள் நகர்மன்ற தலைவராக பணியாற்றி வருகிறார்கள்.

திரு கி.இராஜன்,எம்.ஏ.பி.எல். அவர்கள் 01.04.2013 முதல் 07.02.2014 வரையிலும் ஆணையராகவும் திரு ஆ.ஜானகிராமன் ,எம்.,இ. நகரமைப்பு அலுவலர் 08.02.2014 முதல் 21.03.2014 –ல் ஆணையர் பொறுப்பிலும் பணியாற்றி உள்ளார்கள். திருமதி கெ.கௌரியம்மாள் மேலாளராகவும், திரு து.கணேசன், கணக்கராகவும், திரு வி.ஜார்ஜ் பி.டெக்., 20.12.2011 முதல் 02.02.2014 முடிய பொறியராகவும், திரு டி.சுரேஷ்குமார்,எம்.டெக்., 03.02.2014 முதல் நகராட்சி பொறியராக 2013–2014–ம் அறிக்கை ஆண்டில் பணியாற்றியுள்ளார்கள்.

3. மன்றக்கூட்டம்

அறிக்கை ஆண்டில் நடைபெற்ற கூட்டம் மற்றும் முடிவு செய்த பொருட்கள் விபரம் வருமாறு .

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சாதாரண கூட்டம் | 5 | முடிவு செய்த பொருட்கள் | 863 |
| 2. | அவசர கூட்டம் | 8 | முடிவு செய்த பொருட்கள் | 732 |
| | | ----- | | ------ |
| | | 13 | | 1595 |
| | | ----- | | ------ |

4.. குழுக்கள்

| வ.எண். | குழுவின்பெயர் | நடைபெற்ற கூட்டஙகள் | முடிவுசெய்யப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | வரிமேல்முறையீட்டு குழு | 1 | – |
| 2 | நியமனக்குழு | 97 | 97 |
| 3 | ஒப்பந்தக்குழு | – | – |

**5. ஆளுகை**

**ஆணையர் ஊதியத்திற்கான பங்குத்தொகை செலுத்துதல் உட்பட பொது நிர்வாகம் மற்றும் வசூல் ஆகிய இரண்டு இனங்களில் அலுவலர்களின் ஊதியம் மற்றும் படிகள் வகைகளில் செலவு ரூ.110.39 லட்சம் ஆகும்.**

சாதாரண செலவுகள் பின்வருமாறு

| | ரூ. இலட்சம் ஆகும் | |
|---|---|---|
| 1. அஞ்சல் | 0.67 | „ |
| 2. எழுதுபொருள் மற்றும் படிவங்கள் | 16.62 | „ |
| 3. பங்குத்தொகை, ஓய்வூதியம் | 531.15 | „ |
| 4. வழக்கு வகைகள் | 4.10 | „ |
| 5. இதர இனம் (2020) | 2.71 | „ |

**ஊழியர் நியமனம் மற்றும் தண்டனை வழங்கல் சம்பந்தமாகவும் உள்ள விதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டது. அரசு ஆணை எண். 126 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 13–05–1996 பிரகாரம் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரிய பயிற்சி நிறுவனத்திற்கு அறிக்கை ஆண்டில் ரூ.1,50,000/– சந்தாத்தொகை வழங்கப்பட்டது.**

வருவாய் பிரிவு

சொத்துவரி மற்றும் இதர வரியினங்கள்

**திரு க.கணேசன், வருவாய் அலுவலர், து.கணேசன், கணக்கர் மற்றும் வருவாய் அலுவலர்(பொ) , ஆகவும் நான்கு வருவாய் ஆய்வாளர்களும், 23 வருவாய் உதவியாளர்களும், ஒரு அலுவலக உதவியாளரும் இவ்வறிக்கையாண்டில் பணியாற்றி வருகின்றனர்.**

**இந்நகராட்சியில் 2013 – 2014–.ம் ஆண்டில் சொத்துவரி இனங்கள் கணிணி மூலமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு உடனுக்குடன் வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வர்களால் ஆய்வுச் செய்யப்பட்டு, மாதாந்திர பட்டியலில் சேர்த்து புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2013 – 2014–ம் ஆண்டில் மொத்தம் 1415 கட்டிடங்களுக்கு புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.**

**தொழில்வரியினங்களில் நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு அலுவலகங்கள், வங்கிகள், பள்ளிகள் மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து தொழில்வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.**

| கேட்பு | | | |
|---|---|---|---|
| | நிலுவை (லட்சத்தில்) | நடப்பு (லட்சத்தில்) | மொத்தம் (லட்சத்தில்) |
| 1. <u>சொத்துவரி</u> கேட்பு | 1892.65 | 1014.73 | 2907.38 |
| வசூல் | 303.08 | 629.82 | 932.90 |
| நிலுவை | 1589.57 | 384.91 | 1974.48 |
| 2. <u>தொழில்வரி</u> கேட்பு | 110.66 | 192.15 | 302.81 |
| வசூல் | 13.70 | 180.53 | 194.23 |
| நிலுவை | 96.96 | 11.62 | 108.58 |
| 3. <u>வரியில்லா இனஙகள்</u> கேட்பு | 95.05 | 339.61 | 434.66 |
| வசூல் | 35.29 | 304.71 | 340.00 |
| நிலுவை | 59.76 | 34.90 | 94.66 |

சொத்துவரி, ஆண்டு வாடகை மதிப்பீட்டின் மீது ஆண்டிற்கு கீழ்கண்டுள்ள பிரகாரம் விதிக்கப்பட்டுள்ளது.

1. பொதுகாரியத்திற்காக 5 ½ %
2. தண்ணீர்வரி 7 %
3. விளக்குவரி 3 ½ %
4 துப்புரவு வரி 5 %

---------------

21 %

---------------

<u>6.சந்தைகள் வண்டி பேட்டை உந்து நிலையம்</u>

வரியில்லா இனஙகள் மூலம் பிற துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாய் விவரம் வருமாறு.

| வ.எண். | இனம் | 2012–2013 (ரூ. இலட்சத்தில்) | 2013–14 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சந்தை | 88.62 | 94.51 |
| 2 | கழிப்பிடஙகள், குளியலறை | 15.27 | 19.48 |
| 3. | பேரூந்துநிலையக்கட்டணம் | 24.68 | 27.06 |
| 4. | ஆடு, மாடு வதை செய்யுமிடம் | 1.14 | 0.96 |
| 5 | வாடகை கார்கள் நிறுத்துமிடம் | 12.30 | 14.35 |
| 6. | பலன்தரும் மரஙகள் | 0.38 | 0.42 |

நகர்மன்றத்தின் பராமரிப்பில் தினசரி காய்கறி சந்தைகள் இருக்கின்றன. வடசேரி கனகமூலம் சந்தையில் பழக்காய் உறைக்குழி ஒன்று உள்ளது. தினசரி சந்தைகள், பழக்காய் உறைக்குழிக்கான கட்டணங்கள் தண்டல் செய்யும் உரிமைகளைப் பொது ஏலத்தின் மூலம் விடப்படுகிறது. அறிக்கை ஆண்டில் அவைகள் மற்றும் கடைகள் ஏலம் மூலம் ரூ.94.51 லட்சம் ரூபாய் வருவாய் ஆகும். கடந்த ஆண்டு 88.62 லட்சம் ஆகும்.

## 7. கழிப்பிடங்கள் குளியலறைகள்

பெரிய பூஙகாவில் 20 அறைகள் கொண்ட கழிப்பிடமும் 10 அறைகள் கொண்ட கழிப்பிடம் வடசேரியிலும் 6 அறைகள் கொண்ட கழிப்பிடமும் 5 அறைகள் கொண்ட குளியலறையும் (கோட்டாரில் 4 குளியல் அறைகள் கொண்ட கழிப்பிடங்கள் குளியலறைகளும்) அண்ணா பேரூந்து நிலையத்தில் 6 அறைகள் கொண்ட கழிப்பிடங்களும் உள்ளன. அவற்றின் மூலம் அறிக்கை ஆண்டில் வருவாய் ரூ.19.48 லட்சம் ஆகும். கடந்த ஆண்டு 15.27 லட்சம் ஆகும்.

## 8. வாடகை கார் நிறுத்துமிடம்.

வடசேரி பிரயாணிகள் தஙகும் விடுதி சாலையில் ஒன்றும், பெரிய பூஙகா சமீபம் ஒன்றும் பூஙகாவிற்கு மேற்கு பக்கம் ஒன்றும் , ஆக மூன்று வாடகை கார் நிற்கும் இடஙகளும் கோட்டாரில் பார உந்து நிலையம் ஒன்றும் , நகர்மன்றத்திற்கு சொந்தமாக உள்ளது. வடசேரி இரு சக்கர வாகன காப்பஙகள் இரண்டு உள்ளது. மேற்படி உரிம இனஙகள் லாறி நிற்கும் இடம் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலத்தில் விட்டதின் மூலம் அறிக்கை ஆண்டில் 14.35 லட்சம் வசூலானது. கடந்த ஆண்டு வசூல் 12.30 லட்சமாக உள்ளது.

நகரில் மக்கள் தொகை கூடிவிட்டதாலும் இந்நகரில் வந்து போகும் மக்கள் மற்றும் பயணிகள் எண்ணிக்கை கூடிவருவதாலும் எல்லா வழி தடஙகளிலும் கூடுதலாக பேரூந்துகள் விடப்பட்டுள்ளதாலும் நெரிசலை தவிர்க்கும் பொருட்டு வடசேரியில் பெருமாள்குளம் பகுதியில் கிறிஸ்டோபர் பேரூந்து நிலையம் என்ற பெயரில் புதிய பேரூந்து நிலையம் 10–02–1994 முதல் இயஙகி வருகிறது. பேரூந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.3/– வசூலிக்கப்பட்டு வந்தது. 01–01–2003 முதல் ரூ.12/– வசூலிக்கப்பட்டு வருகிறது.. அறிக்கை ஆண்டில் பேரூந்து நிலையஙகள் கட்டணமாக 27.06 லட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றது.

நகரின் மையத்தில் அண்ணா பேரூந்து நிலையம் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பேரூந்து நிலையம் ‘சி‘ பிரிவைச் சார்ந்ததாகும். தற்போது 1–1–2003 முதல் ‘ பி ‘ பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. பேரூந்து நிலையத்திற்கு வரும் பேரூந்திற்கு நாள் 1 க்கு 1–1–2003 முதல் ரூ.12/– வீதம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பேருந்து நிலையம் ரூ.129/- லட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டு 16.11.2011 முதல் பேருந்து நிலையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வரப்படுகிறது..

**9. .கலைவாணர் கலை அரஙகம்**

இந்நகரில் அமைந்துள்ள கலைவாணர் கலை அரஙகம் 30–05–1977 முதல் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 1–10–2003 முதல் பொது ஏலம் விடப்பட்டு உரிமம் வழஙகப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மான எண்.536 நாள் 05.08.2011–ன் படி மாத வாடகை ரூ.25,002–ற்கு பொது ஏல நடவடிக்கை மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அவ்வகையில் ஓர் நிதியாண்டிற்கு ரூ.300024/ வருவாய் ஈட்டபடுகிறது.

**10. அச்சம் மற்றும் அறுவருக்கதக்க வணிகஙகள்**

அச்சம் மற்றும் அருவருப்பு வணிகஙகள் மீது உரிமையாணைகள் வழஙகப்பட்டது. உணவு பொருட்கள் கலப்பட சட்டத்தின் கீழ் வியாபாரம் நடத்துவதற்கு உரிமையாணை தக்க விதிகளுக்குட்பட்டு வழஙகப்பட்டு வருகிறது. தணிக்கை ஆண்டில் உணவுப்பொருள் கலப்பட உரிமையாணை தொகையில் வசூலான தொகை ரூ. 1047.433 ஆகும். அறிக்கை ஆண்டில் அச்சம் மற்றும் அறுவருப்பு (P.F.A.) பணிகள் மீது உரிமையாணை வழஙக வசூலான தொகை ரூ.17162 ஆகும்.

**தணிக்கை அறிக்கை**

அறிக்கை ஆண்டில் 2010 – 2011 ம் ஆண்டு கணக்கு முடிக்கப்பட்டது..

| | |
|---|---|
| தணிக்கை பத்திகளின் ஆரம்ப நிலுவை 1–4–2014 | 4111 |
| நீக்கம் செய்யப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | – |
| | – – – – |
| அறிக்கை ஆண்டில் இறுதியில் உள்ள பத்திகளின் எண்ணிக்கை | 4111 |
| | – – – |

**அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனஙகளிடமிருந்து பெறப்பட்ட கடன் விவரம்**

| என்ன காரணத் திற்காக வாஙகப் பட்டது | அறிக்கை ஆண்டில் ஆரம்ப நிலுவைத் தொகை | அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட கடன் | அறிக்கை ஆண்டில் கடன் அசல் தொகை | வட்டி | அறிக்கை ஆண்டில் இறுதியில் கட்ட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| ரூ. லட்சத்தில் | ரூ. லட்சத்தி ல் | ரூ. லட்சத்தில் | ரூ. லட்சத்தில் | ரூ. லட்சத் தில் | ரூ. லட்சத்தில் |
| **Special road Works** | **49.01** | **–** | **12.13** | **4.49** | **36.88** |
| **Water supply Scheme** | | | | | |
| **- HudCo** | **1401.40** | **–** | **154.45** | **144.47** | **1246.65** |

அறிக்கை ஆண்டில் கேளிக்கை வரி ரூ.7.22 லட்சமும் முத்திரைக் கட்டணமாக ரூ.87.57 லட்சமும் பெறப்பட்டுள்ளது.

## <u>பொறியர் பிரிவு</u>

பொறியர் பிரிவில் இரண்டு உதவி செயற்பொறியாளர் நிலையில் நகர்மன்ற பொறியாளர் ஒருவரும், இளநிலை பொறியாளர் ஒருவரும் பணிபுரிகின்றனர். வரைவாளர் ஒருவரும் , பணிஆய்வர்கள் 4 நபரும் , பொருத்துநர் 5 பேர்களும் பணிபுரிகின்றனர். பொதுப்பணி மேற்பார்வையாளர்கள் இரண்டுபேரும் பணியாற்றி வருகின்றனர்.

திரு. தா.சுரேஷ்குமார் நகர்மன்ற பொறியாளராக தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

பொறியர் பிரிவு பணியாளர்கள் ஊதிய வகையில் அறிக்கை ஆண்டில் செலவு ரூ. 98.94 லட்சம் ஆகும்.

1. <u>சாலைகள், பாலஙகள், கட்டிடஙகள் முதலியன.</u>

நகர்மன்றத்தில் பராமரிக்கப்பட்ட சாலைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | 2012–2013 |
|---|---|---|
| | பேவர்பிளாக் | 4.500 |
| 1 | சிமெண்ட் தளம் | 72.100 |
| 2 | கருந்தளம் | 185.170 |
| 3 | கருஙகல் கப்பி சாலை | – |
| 4 | செஞ்சரள் மண் சாலை | 7.830 |
| | மொத்தம் | 269.600 கி.மீ (Including Extent 5 Panchayat), |

<u>பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2011–2012</u>

2011–2012–ம் ஆண்டுக்கான சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் திரு என்.நாஞ்சில் முருகேசன், எம்.எல்.ஏ.அவர்களின் பரிந்துரையின் கீழ் 95.30 லட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு 28 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 26 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 2 பணிகள் நீக்கம் செய்யப்பட்டு அதற்கான தொகை 11.25 லட்சம் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு திரும்ப செலுத்தப்பட்டுள்ளது.

<u>பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2012–2013</u>

2012–2013–ம் ஆண்டுக்கான சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் திரு என்.நாஞ்சில் முருகேசன், எம்.எல்.ஏ.அவர்களின் பரிந்துரையின் கீழ் 74.58 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 23 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 17 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 2 பணிகள் நீக்கம் செய்யப்பட்டு அதற்கான தொகை 6.00 இலட்சம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு திரும்ப செலுத்தப்பட்டுள்ளது. 4 பணிகள் நடைபெற்று வருகிறது.

**<u>சட்ட மன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2013–2014</u>**

**2013–2014–ம் ஆண்டுக்கான சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திரு.N.நாஞ்சில் முருகேசன்,M.L.A., அவர்களின் பரிந்துரையின் கீழ் 21.50 இலட்சத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு 9 பணிகள் எடுக்கப்பட்டு 7 பணிகள் முடீக்கப்பட்டு 2 பணி துறைமூலம் நடைபெற்று வருகிறது.**

**<u>உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி</u>**

**2012–2013–ம் ஆண்டு உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் ரூ.129.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.**

**<u>பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2013–2014</u>**

**2013 – 2014 .ம் ஆண்டுக்கான பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் திருமதி.ஹெலன்டேவிட்சன்,எம்.பி. அவர்களின் பரிந்துரையின்பேரில் வேலைகள் செய்திட ரூ.13.80 இலட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு 7 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 6 பணிகளும் முடிக்கப்பட்டு 1 வேலை நடைபெற்று வருகிறது.**

**<u>சட்ட மன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்</u>**

**2013–2014–ம் ஆண்டுக்கான சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திரு.N.நாஞ்சில் முருகேசன்,M.L.A., அவர்களின் பரிந்துரையின் கீழ் 21.50 இலட்சத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு 9 பணிகள் எடுக்கப்பட்டு 7 பணிகள் முடீக்கப்பட்டு 2 பணி துறைமூலம் நடைபெற்று வருகிறது.**

**<u>ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம்</u>**

**2011–2012–ம் ஆண்டுக்கு ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.47 கோடியில் 214 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 17 உள் கட்டமைப்புபணிகளில் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 2 பணிகள் துறை மூலம் நடைப்பெற்று வருகிறது.**

**<u>சொர்ணஜெயந்தி திட்டம்</u>**

**2013–2014–ம் ஆண்டிற்கான சொர்ணஜெயந்தி திட்டத்தின் கீழ் 18.00 இலட்சத்தில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.**

<u>நகராட்சி பொதுநிதி வேலைகள்</u>

2012–2013–ம் ஆண்டில் தார்சாலை மற்றும் குடிநீர் பணிகள், சிமெண்ட் சாலைகள், வடிகால் அமைத்தல் பணிகளுக்கு பொதுநிதியிலிருந்து ரூ.1114.73 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

<u>நடப்பு ஆண்டில் பராமரிக்கப்பட்ட சாலை விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 35.00 கி.மீ. |
| 2 | கருந்தளம் | 48.00 கி.மீ. |

<u>1. திறந்த வெளிக்கழிப்பிடம் மாற்று பராமரிப்பு</u>

2012–2013 ஆண்டுக்கு திறந்த வெளிக்கழிப்பிடம் வசதி திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சத்தில் 1 பணி எடுக்கப்பட்டு 1 பணி முடிக்கப்பட்டுள்ளது.

2. <u>பிளாஸ்டிக் சாலை அமைத்தல் 2011–2012</u>

2011–2012–ம் ஆண்டுக்கு பிளாஸ்டிக் மூலம் சாலை அமைத்தல் மற்றும் கருவி (Machinal ) ரூ.25.40 இலட்சத்திற்கு 5 பணிகள் எடுக்கப்பட்டு 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

3. <u>ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் ( IUDM) 2013- 2014</u>

2013–2014–ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் <u>( IUDM)</u> திட்டத்தின் கீழ் அரசு மானியம் 260.00லட்சத்திற்கு சாலை பணிகள் , வடிகால் கட்டுதல், குடிநீர் வேலை, மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

<u>குடிநீர் பணிகள் ஆப்ரேட்டர்</u>

குழாய் ஆய்வர் ஒருவரும், பில்டர்பெட் ஆப்ரேட்டர் இருவரும், ஐந்து பொருத்துனர், இரண்டு மின்பணியாளர், ஒரு மின்கண்காணிப்பாளர், இரண்டு அளவுமானி கணக்கீட்டாளர்களும் இவ்வறிக்கையாண்டில் பணியாற்றியுள்ளனர்.

நாகர்கோவில் நகராட்சி பகுதிக்கு தேவையான குடிநீர் முக்கடல் அணையிலிருந்து பெறப்பட்டு வழஙகப்படுகிறது. முக்கடல் அணை நாகர்கோவில் நகராட்சி எல்கையிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. புவிஈர்ப்பு விசை மூலம் நகருக்கு பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அணையின் தண்ணீரின் கொள்ளவு (–) 19.50 அடி உயரமும் அதன் மேல் பிளஸ் 25 அடி உயரமும் உள்ளது. முக்கடலில் உள்ள மலைகளுக்கு இடையே கட்டப்பட்டிருக்கும் அணைக்கட்டில்

தேக்கி வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் 400எம்.எம் மற்றும் 600எம்.எம் குழாய்கள் மூலம் நகரிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. முக்கடலில் இருந்து குழாய்கள் வரும் பாதையில் இருக்கும் வழியோர கிராமங்களான பூதப்பாண்டி, துவரஙகாடு, விளாஙகாடு, ஈசாந்திமஙகலம், இறச்சக்குளம், புத்தேரி ஆகிய 6 ஊராட்சிகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தேரூரில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு இறச்சகுளம் பகுதியிலிருந்து சுசீந்திரம் மற்றும் கன்னியாகுமரி பேரூராட்சிகளுக்கு அளவுமானி பொருத்தப்பட்டு தினசரி 2 MLD சுத்தம் செய்யப்படாத நீர் வழஙகப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்படும் குடிநீர் சுகாதார முறையில் சுத்திக்கரிக்கப்பட்டு இரண்டு தரைமட்ட நீர் தொட்டி, மூன்று மேல்நிலை நீர்தாஙகிகள் வழியாக நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று உயர்நிலை நீர் தாஙகிகளும் முறையே 8.00 லட்சம் லிட்டர் தண்ணீர் கொள்ளளவு உடையதாகும். இந்நீர் தாஙகியில் நீரேற்றுவதற்கு நான்கு 50 பரியாற்றல் இரண்டு 40 பரியாற்றல் மற்றும் 25 பரியாற்றல் 75 பரியாற்றல் இரண்டு மின் உந்துகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. நகரில் 268 கிலோமீட்டர் நீளமுள்ள பகிர்மான குழாய்கள் மூலம் பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு நகர மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நகரில் அறிக்கை ஆண்டில் மொத்தம் 28721 வீட்டு குழாய் இணைப்புகள் உள்ளது. நகரில் 230லட்சம் லிட்டர் தண்ணீர் நபர் ஒருவருக்கு 93 LPCD வீதம் விடப்படுகிறது.

மேலச்சூரஙகுடி சானல்கரையில் அமைக்கப்பட்ட ஐந்து ஆழ் குழாய் கிணற்றிலிருந்து குழாய் மூலம் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் பம்பிங செய்து மறவன்குடியிருப்பு பகுதியில் உள்ள மேல்மட்ட நீர்தேக்க தொட்டியில் நீரேற்றம் செய்து அந்த பகுதி மக்களுக்கு குடிநீர்வழஙகப்பட்டு வருகிறது. புன்னைக்காட்டுவிளை ஹவுசிஙபோர்டு காலனியில் 6 ஆழ்குழாய் கிணறுகள் நகராட்சி மூலம் ஏற்கனவே அமைத்து அவற்றை பகிர்மான குழாயில் இணைத்து தினமும் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் கோணம், கூத்தஙகாடு, குருசடிரோடு , புன்னைக்காட்டுவிளை, ராஜாக்கமஙகலம் ரோடு, தளவாய்புரம், ஹவுசிஙபோர்டு மற்றும் முனிசிபல் காலனி ஆகிய பகுதி மக்களுக்கு குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.

மேலும் நகரில் பல்வேறு பகுதிகளில் சுமார் 863 இடஙகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது,

மேலும் இந்நகராட்சி குடிநீர் திட்டத்தில் ரூ.17.06 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வேலை மேற்கொள்ளப்பட்டு முக்கடல் அருகில் வரும் அனந்தனாறு கால்வாயிலிருந்து 120 கு.வே.மின் மோட்டார் மூலம் 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டியிலிருந்து 326 கன அடி தண்ணீர் ஜீன் முதல் பெப்ரவரி வரை உள்ள காலத்தில் முக்கடல் அணைக்கு பம்பிங செய்து முக்கடல் அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக 800 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் மூலம் முக்கடல் அணையிலிருந்து தண்ணீரை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வர வழிவகை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் 17Mld வடிகட்டும் திறன்கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டுள்ளது.

நகராட்சி பகுதிகள் 11 தொகுதிகளாக பிரித்து 7 புதிய மேல்நிலை நீர் தொட்டிகளும், ஒரு புதிய தரை மட்டத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டு 9 தொகுதிகளுக்கு கூடுதலாக பகிர்மான குழாய்களும் பதிக்கப்பட்டு, புதிய மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிக்கு தண்ணீர் பம்பிங செய்து சுத்திகரிப்பு நிலையத்தில் 20 கு.வே., 30 கு.வே., மற்றும் 75 கு.வே. மின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் பம்பிங செய்யப்பட்டு, பழைய மற்றும் புதிய நீர் தேக்கத்தொட்டி நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நாகர்கோவில் நகராட்சி பகுதிகளில் குடிநீர் வினியோகத்திற்காக நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையிலிருந்து நாள் ஒன்றிற்கு 23 MLD தண்ணீரும், வழியோர கிராம பகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 25 MLD குடிநீர் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்ய புத்தன் அணை அருகில் கிணறு அமைத்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு ரூ.209.75 லட்சம் மதிப்பீட்டில் பிரேரணை தாயார் செய்து குடிநீர் வடிகால் மூலம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

<u>10. வாகனஙகள்</u>

ஒரு பாரஉந்து பொதுப்பணி வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. சாலை உருளை உந்து ஒன்றும் நகராட்சிக்குச் சொந்தமாக உள்ளது. தண்ணீர் விநியோகத்துக்கென நான்கு டேஙகுகளுடன் கூடிய பார உந்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகர்மன்றத் தலைவர் பயன்பாட்டிற்கு ஒரு ஈப்பு வாகனம் நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு ஒரு ஈப்பு வாகனம் நகராட்சி பொறியர் பயன்பாட்டிற்கு ஒரு ஈப்பு வாகனம் மற்றும் நகர்நல அலுவலர் பயன்பாட்டிற்கு ஒரு வேனும் உள்ளது.

<u>கருவியும் தளவாடஙகளும் மற்றும் பண்டக சாலைகள்</u>

மின்சார பொருட்கள் மற்றும் தண்ணீர் வினியோகப் பொருட்கள் பாதுகாப்பாக வைப்பதற்கு நகராட்சியால் ஒரு பண்டகசாலை கிருஷ்ணன்கோவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளும் கணனி மயமாக்கப்பட்டு சொத்துவரி, தண்ணீர் வரி, தொழில்வரி ஆகியவற்றிற்கு ரசீதுகளும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் கணணி மூலமாக வழஙகப்பட்டு வருகிறது. நகராட்சி நிதியிலிருந்து 33 கணணிகளும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 11 கணணிகளும் வழஙகப்பட்டு மொத்தம் 44 கணணிகள் நல்ல முறையில் இயஙகி வருகிறது. பொது மக்கள் நலன் கருதி முக்கிய இடஙகளில் கிருஷ்ணன்கோவில், வடிவீஸ்வரம், வடசேரி, இடலாக்குடி மற்றும் வட்டவிளை ஆகிய வசூல் மையஙகள் அமைக்கபட்டு முடிவு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

<u>தெரு விளக்குகள்</u>

நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளில், குழல் விளக்குகள் 11008 –ம் 70 வாட்ஸ் சோடியம் விளக்குகள் 1172 ம் 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் 1922 ம் 85 வாட்ஸ் CFL விளக்குகள் 1888 –ம் உயர் கோபுர மின்விளக்கு 28 Solar ஆக மொத்தம் 16073 உள்ளது , மேலும் நகராட்சியில் 22 வார்டுகளில் மொத்தம் 4816 விளக்குகள் மட்டும் நகராட்சி பணியாளர்களால் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை 7 மின் கம்பியாளர்களும், 5 மின்கம்பி உதவியாளர்களும், 2 தினக்கூலி பணியாளர்களும் பராமரித்து வருகின்றனர். மீதி 30 வார்டுகளில் உள்ள 10604 விளக்குககள தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. <u>தோணித்துறை முதலானவை.</u>

நகராட்சிக்குச் சொந்தமான தோணித்துறை ஏதுமில்லை.

<u>2. ஓய்வு மாளிகை</u>

நகராட்சிக்கு சொந்தமான ஓய்வு மாளிகையோ பிரயாணிகள் தங்கும் விடுதியோ இல்லை. பொதுப்பணித்துறையின் கீழ் வடசேரி தங்கும் விடுதியும், வருவாய் துறையின் கீழ் ராமவர்மபுரத்தில் ஒரு தங்கும் விடுதியும் , வடசேரியில் ஒரு தங்கும் விடுதியும் உள்ளது.

<u>3. கல்வி</u>

இந்நகராட்சியால் பள்ளிகூடங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. பள்ளிக்கூடங்கள் அனைத்தும் அரசினராலும் தனியார் நிறுவனத்தினராலும் நடத்தப்பட்டு வருகிறது.

<u>4. பொது வானொலி பெட்டி</u>

இந்நகராட்சியால் வானொலி பெட்டி ஒன்று பொதுமக்கள் வசதிக்காக குறுந்தெரு பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் நகரின் மையப்பகுதியில் நான்கு சாலைகள் சந்திக்கும் இடத்தில் மணிக்கூண்டு ஒன்று இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மணிக்கூண்டும் நாகராஜா கோவிலும், நகராட்சியின் சின்னமாக விளங்குகிறது.

<u>பொது பூங்காக்கள்.</u>

<u>பூங்கா விவரம்</u>

அரசாணை எண்.1515 நாள் 17.8.1965–ன் படி கீழ்க்கண்ட பூங்காக்கள் அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

1. மௌலானா அபுல்கலாம் ஆசாத் சிறுவர் பூங்கா, இடலாக்குடி
2. கண்டஞ்சான் குளம் சிறுவர் பூங்கா
3. தழியபுரம் பூங்கா

4. நகராட்சி பிரதான பூங்கா (சச்சியோத்தம சர்.சி.வி.ராமசாமி அய்யர் நினைவு பூங்கா.)
5. கீழராமன்புதூர் நகராட்சி பூங்கா (துட்டான்விளை பூங்கா)
6. இருளப்பபுரம் பூங்கா

மேலும் கீழ்க்கண்ட பூங்காக்களும் அரசால் மறு அறிவிக்கை செய்ய நகராட்சி தீர்மானம் எண்.711 நாள் 27–07–2005–ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. காந்தி நகரட்சி பூங்கா (ஆராட்டு ரோடு, வடசேரி)
2. கிருஷ்ணன்கோயில் திருப்பதிநகர் பூங்கா (சி.பி. எச். ரோடு)
3. வி.என். காலனி பூங்கா (பீச் ரோடு)
4. சாகிப்பு நகர் பூங்கா (இருளப்பபுரம்)
5. வெள்ளாடிச்சி விளை பூங்கா
6. சிதம்பரம் கார்டன் பூங்கா (பீச் ரோடு)
7. கலைசிறக்கன் குடியிருப்பு பூங்கா
8. பிரியா நகர் பூங்கா (பறக்கை ரோடு)
9. சூரியா நகர் பூங்கா (வட்டவிளை)
10. ஹோலிகிராஸ் நகர் பூங்கா
11. பொன்னப்பநடார் காலனி பூங்கா
12. நாஞ்சில் நகர் பூங்கா
13. பாரதி நகர் பூங்கா
14. வள்ளலார் நகர் பூங்கா
15. வல்லன்குமாரவிளை பூங்கா ( ஹவுசிங்போர்டு)

அறிக்கை செய்யப்பட்ட 6 பூங்காக்கள் மற்றும் அறிக்கை செய்யப்பட வேண்டிய 15 பூங்காக்கள் சேர்ந்து மொத்தம் 21 பூங்காக்கள் பராமரிப்பில் உள்ளது.

ஆறு தோட்டக்காரர்கள் இவ்வறிக்கையாண்டில் பணியாற்றியுள்ளனர்.

<u>போக்குவரத்து</u>

இந்நகரின் எல்லா இடஙகளுக்கும் போய்வர தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பேருந்து வசதிகளை நடத்தி வருகிறது. தனியார் சிற்றூந்து போக்கு வரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. கேரள அரசு போக்குவரத்து கழகமும் இந்த நகரில் போக்குவரத்து வசதிகளை நடத்தி வருகிறது.

<u>நகரமைப்பு பிரிவு</u>

| | | | 2013–2014 |
|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | காலியாக உள்ள பணியிடம் |
| 1 | நகரமைப்பு அலுவலர் | 1 | – |
| 2 | நகரமைப்பு ஆய்வர்கள் | 5 | 1 |
| 3 | உதவியாளர் | 1 | – |
| 4 | இளநிலை உதவியாளர் | 2 | – |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 | – |
| 6 | சஙகிலியாளர்கள் | 4 | 1 |

திரு அ.ஜானகிராமன், M.E., அவர்கள் நகரமைப்பு அலுவலராக அறிக்கையாண்டில் பணியாற்றி வருகிறார் நகரமைப்பு ஆய்வாளர்கள் நான்கு பேர் பணியாற்றி வருகிறார்கள்

இரண்டு சஙகிலியாளர்களும் நகராட்சி சார்பில் அறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகிறார்கள், ஒரு நகரளவர் மற்றும் சஙகிலியாளர் அயற்பணியின் அடிப்படையில் இவ்வறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகிறார்கள்

நகரமைப்பு பிரிவில் வளர்ச்சி திட்டஙகள் மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் அமுல் படுத்தப்பட்டு வரப்படுகிறது.

| | | 2013–14 |
|---|---|---|
| 1 | கட்டிடஙகள் கட்டவும் மற்றும் கட்டிடஙகளில் மாற்றம் செய்யவும் அறிக்கை ஆண்டில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பஙகள் | 990 |
| 2 | கட்டிட உரிமையாணை கட்டிடம் A/c Head 1019 28.00 இலட்சம்<br>கட்டிட இடிபாடு கட்டணம் A/c Head 1043 26.00 இலட்சம் | 54.00 லட்சம் |
| 3 | வழக்குகள் தொடரப்பட்டது | 0.56 |
| 4 | வளர்ச்சி கட்டணம் | 0.30 |
| 5 | தனியார் மனைப்பிரிவு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 175 முதல் 178 ன் கீழ் அனுமதித்தது. | இல்லை |
| 6 | வருட ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த தற்காலிக வரை கடப்பு | – |
| 7 | அறிக்கை ஆண்டில் முடிவு செய்த வரைகடப்புகள் | – |
| 8 | ஆண்டு இறுதியில் நிலுவை இருந்த வரைகடப்புகள் | இல்லை |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 250 கீழ் இயந்திர ஸ்தாபன அனுமதி உரிமம் வழஙகப்பட்ட அமைப்புகள்.

| | | |
|---|---|---|
| 1 | அறிக்கை ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை | இல்லை |
| 2 | அறிக்கை ஆண்டில் பெறப்பட்டவை | இல்லை |
| 3 | முடிவு செய்தது அனுமதி கொடுத்தது | இல்லை |

| | | |
|---|---|---|
| 4 | அனுமதி மறுக்கப்பட்டவை | இல்லை |
| 5 | திருப்பப்பட்டது | இல்லை |
| 6 | நிலுவை | இல்லை |

முழுமைத் திட்டம்

தற்போது அரசாணை எண்.213 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD4–2) நாள்.14–10–2008–ன் படி திருத்திய முழுமைதிட்டத்திற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. மேலும் இந்நகரில் விரிவு அபிவிருத்தி திட்டஙகள் மொத்தம் 20 உள்ளது. இவற்றில் 16 திட்டஙகள் அஙகீகரிக்கப்பட்டு 2 திட்டஙகள் இணக்கம் அளிக்கப்பட்டும் 1 திட்டம் வரைவு நிலையிலும் 1 திட்டம் அறிவிக்கை நிலையிலும் உள்ளது. இவை அனைத்தும் நடைமுறையில் உள்ளது.

பொது சுகாதாரம்

அறிக்கை ஆண்டில் 01.01.2011முதல் 12.03.2014 வரை நகர்நல அலுவலர் பொறுப்பாக திரு எஸ்.ஆர்.சந்திரன் ,சுகாதார ஆய்வர் ,திருமதி உமாராணி,மருத்துவ அலுவலர் மற்றும் 13.03.2014 முதர்.

இதர அலுவலர்கள்மற்றும் பணியாளர்கள்.

பொது சுகாதாரப்பிரிவில் 7 ஆய்வாளர்களும், 15 துப்புரவு மேற்பார்வையாளர்களாக புதியதாக துப்புரவு பணியாளர்கள் 17.06.2013 நியமனம் செய்யப்பட்டதினால் 278 பணியாற்றி வந்தனர். இவர்களுக்கென ஊதியம் மற்றும் இதர வகையில் ரூ. லட்சம் செலவிடப் பட்டுள்ளது.

மருந்தகம்

காந்திஜி ஞாபகார்த்த நகராட்சி மருந்தகம் ஒன்று வடசேரி பகுதியில் 1968 அக்டோபர் முதல் நகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. அதில் ஒரு மருத்துவ அலுவலரும் , மருந்து கலக்குபவரும், ஆண் தாதி ஒருவரும் , ஏவலர் ஒருவரும் ஆக நான்கு பேர் பணிபுரிகிறார்கள் மருந்தகம் மற்றும் பணியாற்றுவோருக்கு அறிக்கை ஆண்டில் ரூ.7.57 லட்சம் செலவிடப்பட்டது. அறிக்கை ஆண்டில் 23700 நோயாளிகளுக்கு சிகிட்சை அளிக்கப்பட்டது. தினசரி சராசரியாக 41 நபர்களுக்கு இம்மருந்தகத்தில் மருத்துவ சிகிட்சை அளிக்கப்பட்டுள்ளது. அரசு தலைமை மருத்துவமனை ஒன்றும் பொது மக்களின் நலனுக்காக அரசினரால் இந்நகராட்சி எல்லையில் நடத்தப்பட்டு வருகிறது. இரட்சணிய சேனை நிறுவனத்தை சார்ந்த காதரின் பூத் மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இது தவிர 109 தனியார் மருத்துவ மனைகளும் இயஙகி வருகிறது.

<u>சத்துணவு மையம்</u>

இந்நகராட்சி பகுதியிலுள்ள 97 ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு நோய் தடுப்பு மற்றும் பணிகள் சம்பந்தமான பராமரிப்பிற்கு மருத்துவ அலுவலர் ஒருவரும் நான்கு செவிலியர்களும் ஒருங்கிணைந்த குழந்தைகள் சார்பாக அலுவலக அலுவலரால் பராமரிக்கப்படுகின்றன. சத்துணவு மையங்கள் பராமரிப்பு சமூக நலத்துறையில் ஐ.சி.டி.எஸ். இலாகாவின் பொறுப்பில் உள்ளது. இந்த மையங்களில் சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மையில் நகர் நல அலுவலர் அவர்களின் மேற்பார்வையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. குறுந்தெரு பார்க்
2. கோட்டார் லாரி ஸ்டாண்ட்
3. பூச்சாத்தான்குளம்
4. எம்.ஜி.ஆர்.நகர்
5. தட்டான்விளை
6. கீழராமன்பு தூர் } கீழ திருக்குடும்பகோவில்
7. தளவாய்புரம் } மேலதிருக்குடும்பகோவில்

<u>அரசு மானியம்</u>

| | |
|---|---|
| யு.ஆர்.எஸ் .திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | – 26 (100% மானியம்) |
| தற்சமயம் பணிபுரிபவர்கள் | –22 |
| காலியிடம் | – 4 |
| ஐபிபி –5–ல் அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – 5 ( 2/3 மானியம்) |
| தற்சமயம் பணிபுரிபவர்கள் | – 4 |

<u>செலவான தொகை</u>

யு.ஆர்.எஸ். ரூ.81,62,659/–(முன்மான்யம் ரூ.4100000/–முதல் தவணை (கிடைப்பதற்கு) ஐ.பி.பி. –5 ரூ. 14,32,120/– விடுவிக்கப்பட்டுள்ளது.

<u>துணை விதிகள்</u>

அறிக்கை ஆண்டில் கீழ் குறிப்பிட்டுள்ள துணை சட்டஙகள் நடைமுறையில் இருந்தது.

1. அபாய அறுவருப்பு தொழில் நடத்துவதற்கு உரிமையாணை வழஙகுவதற்குரிய துணை விதிகள் மார்த்தாண்டவர்மா குடிநீர் வழஙகும் துணை விதிகள்.
விளம்பர வரியின் விதிகள் துணை விதிகள்.

பொது சுகாதார பொது கழிப்பிடஙகள் தண்ணீர் வசதியுடன் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் பகுதிகளுக்குள் சேகரிக்கப்பட்ட குப்பை கூழஙகள் மாட்டுச் சந்தையில் உள்ள மாட்டுச் சாணம் பொது கழிப்பிடஙகள் மற்றும் நச்சுத் தடை தொட்டி கழிப்பிடஙகளில் உள்ள கழிவுகள் வலம்புரிவிளையில் உள்ள 14.82 ஏக்கர் நிலப்பரப்பில்

அமைந்துள்ள நகராட்சி கலவை உரம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிக்காக 8 பார உந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதார ஆய்வர் ஒருவர் உரம் சேகரிப்பு நிலையத்தை கண்காணித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் 19590 மெட்ரிக் டன் உரம் தயாரிக்கப்பட்டது. ஒரு மெட்ரிக் டன் விலை ரூ.12.50 ஆகும் அறிக்கை ஆண்டில் உரம் விற்பனை மூலம் ரூபாய் ஏதும் இல்லை. கனக மூலம் சந்தையிலுள்ள குப்பை கூழங்கள் உரக்கிடஙகிற்கு எடுத்துச் சேர்க்கப்பட்டது. மேற்படி பணி சுகாதார பணியாளர்கள் மூலமாகவும், தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையிலும் மேற்கொள்ள பட்டுள்ளது.

சுகாதாரப்பிரிவில் 203 சுகாதாரப்பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் கழிப்பிடம் சுத்தம் செய்தல், தெருபெருக்குதல், ஓடை சுத்தம் செய்தல், பேரூந்து நிலைய பணிகள் செயல்படுத்தப்பட்டு வந்தது. சுகாதார பணியாளர்களுக்கு சீருடை ஆண்டுக்கு கைத்தறி துணியில் இரண்டு அரைக்கைச் சட்டையும், இரண்டு அரைக்கால் சட்டையும் வழஙகப்பட்டுள்ளது. தலைப்பாகைத்துணி 2 மீட்டர் வழஙகப்பட்டுள்ளது. பெண்களுக்கு 2 சேலையும் கைத்தறியில் வழஙகப்பட்டுள்ளது. அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஜோடி செருப்பு வழஙகப்பட்டது.

<u>உணவு பொருள் கலப்படம்.</u>

தனித்துறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>திருவிழாக்கள்.</u>

கோட்டாரில் அமைந்திருக்கும் புனித சவேரியார் பேராலயத்தில் வருடந்தோறும் நவம்பர், டிசம்பர் மாதஙகளில் நடைபெறும் திருவிழா இந்நகரிலேயே பெரிய திருவிழாவாகும். இந்த திருவிழாவின்போது இம்மாவட்டத்திலிருந்து சுமார் இரண்டு லட்சத்துக்கு மேலாக மக்கள் கூடுவார்கள். இது தவிர ஆறு சிறு திருவிழாக்களும் இந்நகரில் நடைபெறுகின்றன. இந்த வகைக்கு அறிக்கை ஆண்டில் ரூ.0.65 லட்சம் செலவு செய்யப்பட்டது.

<u>வருமானம்</u>

மேற்படி அறிக்கையாண்டில் திருவிழாகாலங்களில் தற்காலிக ஸ்டால்கள் குத்தகைக்கு விடப்பட்ட வகையில் ரூ.8.71 இலட்சம் வருவாய் வரப்பெற்றுள்ளது.

<u>நகராட்சி அனாதை மடம்</u>

1946—ம் ஆண்டு ஸ்ரீ அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதை விடுதி என்ற ஸ்தாபனம் நிறுவப்பட்டது. மேற்படி ஸ்தாபனத்திற்கு திரு. எஸ். ஹமீது செய்யத் அப்துல் ரஸாக் காதிரி அவர்கள் கௌரவ மேற்பார்வையாளராக பணியாற்றினார்கள். இந்த ஸ்தாபனம் நடத்துவதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/— வீதம் நகரசபையிலிருந்து கொடுக்கப்பட்டது. சராசரி 30 நபர்களுக்கு உணவும், துணிகளும் கொடுக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தை சென்னை பிச்சை எடுப்பு தடுப்பு சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு விடுதியாக மாற்றுவதற்கு அரசாஙகம் அனுமதித்துள்ளது. 01—04—1961—ல் இந்த ஸ்தாபனத்தை நகர்மன்றம் ஏற்று நடத்தி வருகிறது. மேற்படி இடத்தில் அனாதைகள் பராமரிக்கப்பட்டு 01.11.1991—ம் தேதியில் இறுதியாக இருந்த அனாதையும் காலம் சென்றுவிட்டபடியால் சமையல்காரர் மற்றும் காவலர் பராமரிப்பு பணிக்கு நியமனம்

செய்யப்பட்ட பணியாளர் திரு தனராஜ் என்பவரும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.மூ.மூ.5607/92/எச்.1 நாள் 26.06.1992 –ன் படி அலுவலக உதவியாளர் பணிக்கு மாற்றப்பட்டபின் மேற்படி இடத்தில் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டதன்படி பொருட்காட்சி, சர்க்கஸ், அரசியல் கூட்டஙகள், மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இது குறித்து அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியரிடம் தொடர்பு கொண்டபோது நகராட்சியில் உள்ள ஆவணங்களை காண்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இவ்விடம் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதாக தெரிய வந்ததால் பல ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து விபரம் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்களால் இப்பிரச்சனையை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் விசாரணைக்கு கொண்டு சென்று விசாரணை அடிப்படையில் முடிவு செய்து கொள்ளலாம் என தெரிவித்தார்.

இந்நிலையில் நகர்மன்ற தலைவர் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் இச்சம்பவத்தை கண்டித்து வருவாய் துறையினரால் வைக்கப்பட்ட போர்டை அகற்றிவிட்டு நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் என போர்டு வைக்கப்பட்டு சாலை மறியலில் ஈடுப்பட்டார்கள் இச்செய்தி அன்றைய மாலைமலர் செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் நகர்மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் பேசியபோது தற்போது நிலையே தொடரலாம் என தெரிவித்தாகவும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதற்குரிய ஆவணஙகளை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் மேற்படி இடம் நாகர்கோவில் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்பதற்குரிய ஆவணஙகளை காண்பிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் எண்.ஆ3/45915/2009 நாள் 16.12.2009 மற்றும் 23.12.2009–ன் படி தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் கிடைக்கப்பெற்ற ஆவணஙகளுடன் 31.12.2009 அன்று மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் நகராட்சி ஆணையரால் நேரில் ஆஜராக்கப்பட்டது.

அனாதைமடம் சம்பந்தமாக 25.01.2010–ம் தேதியில் நகர்மன்றத்தின் சிறப்புக்கூட்டம் மாலை 4.00 மணியளவில் நடத்தப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 724 நாள் 25.01.2010 –ன் படி தீர்மானமும் இயற்றப்பட்டது.

மேற்படி ஆவணஙகளை பார்வையிட்டு மேற்படி ஆவணஙகள் அனாதைமடம் இடம் நகராட்சிக்குசொந்தமானது என்பதற்குரிய போதுமான ஆவணஙகளாக இல்லை என தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஆணையர் கேட்டுக் கொண்டதற்கிணஙக கால அவகாசம் வழஙகப்பட்டு 05.02.2010 அன்று கூடுதல் ஆவணஙகளுடன் நேரில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அனாதைமடம் உரிமை தொடர்பான பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள சில அரசாணைகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் அரசுச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை சென்னை அவர்கள் வழியாக அரசு செயலாளர் உள்துறை அவர்களுக்கு அரசாணை நகல்கள் பெற்று வழஙகுமாறு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் இடப்பிரச்சினை தொடர்பாக 27.01.2010 மாலை 3.30 மணியளவில் நாகர்கோவில் அரசினர் விருந்தினர் மாளிகையில் கலந்தரையாடல் செய்திருப்பதன்பொருட்டு அதுசமயம் உரிய ஆவணஙகளுடன்

கலந்துகொள்ள தெரிவித்து ஆணையர் அவர்கள் சென்னையிலிருந்து அலைபேசியில் அறிவுறுத்தியதன்படியும், நகர்மன்றத்தலைவர் அவர்கள் நகரமைப்பு ஆய்வர் **II–**யிடம் அறிவுறுத்தியதன்படியும் உரிய ஆவணங்களுடன் நகரமைப்பு ஆய்வர்களுடன் நகரமைப்பு அலுவலர் கலந்துரையாடலில் கலந்து கொணடார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் **05.02.2010–** அன்று சென்னையில் உள்ள கூட்டத்தில் கலந்து கொள்வதன் பொருட்டு **27.01.2010** அன்று காலை **11.00** மணியளவில் நடத்தப்பட்ட நிலம் சம்மந்தமான ( **Land matters** ) ஆய்வுக்கூட்டத்தில் ஆணையர் பிரதிநிதியாக நகரமைப்பு ஆய்வருடன் கலந்து கொண்டபோது கூட்டத்தின் முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கலந்துரையாடலில் கலந்து கொள்ளத்தெரிவித்தார்.

அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாகர்கோவில் நகர்மன்றத்தலைவர், நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் வருவாய்க் கோட்டாட்சியர் மற்றும் **34–**வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் தொகுப்பாணையும் அனாதைமடம் கட்டிடத்திற்கு **1946–**ம் வருடம் அடிக்கல் நாட்டியதற்கான கல்வெட்டின் புகைப்படத்தையும் சுட்டிக்காட்டி **1946–**ம் வருடத்திலிருந்தே அனாதை மடம் உள்ள இடம் நகராட்சியின் கைசொத்தில் இருந்து வருவதாகவும், அந்த இடத்தில் நாகர்கோவில் மக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்வற்கு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டி குடிநீர் வழுங்கியும் சத்துணவுக்கூடம் வார்டு ஆபீஸ் ஆகியவை கட்டியும் சர்க்கஸ் மற்றும் பொருகாட்சி போன்ற பொது நிகழ்ச்சிகள் நடத்தியும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது எனவும், மேலும் நாகர்கோவில் நகருக்குள் அரசு பொது நிகழ்ச்சிகள் மற்றும் வேறு பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு இது தவிர வேறு பெரிய திறந்தவெளி இல்லாததாலும், எவிதம் கட்டுமானங்களும் கட்டாமல்திறந்தவெளியாக பராமரித்திட இந்த இடம் நகராட்சியில் இருப்பதே சரியானதாகும் என்றும் முதியோர் இல்லம் அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் வேறு இடம் தேர்வு செய்து கொள்ளவும் தமதுகருத்தினை தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் நகராட்சி சமர்ப்பித்த அறிக்கையின்படி **1958–59–**ம் ஆண்டுகளில் உள்துறையால் பிறப்பிக்கப்பட்ட் அரசாணைகளில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிந்து அதன் அடிப்படையில் மாற்றத்திற்கு வரலாம் எனத்தெரிவித்தார்.

நகர்மன்ற தலைவர் அவர்கள், அரசாணைகள் அரசிதழில் பிரசுரிக்கப்படாததாகையால் அவற்றை தேடும் பணியாக நகராட்சியில் கடந்த இரண்டு மாதஙகளாக தேடுதல் வேலை தவிர வேறு எந்த வேலையும் மேற்கொள்ள இயலாத நிலையும் நகராட்சி ஆணையரும் பழைய ஆவணஙகளைத்தேடி பெறுதல்பொருட்டு ஆவணக்காப்பாகம், தலைமைச்செயலகம். நகராட்சி நிர்வாக இயக்குனரகம் ஆகிய அலுவலகஙகளுக்கு அலைந்தும் இன்னும் கிடைத்தபாடில்லை. எனவே அவைகளைவேண்டும் என வற்புறுத்தவேண்டாம் எனவும் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட செட்டில்மெண்ட்டுக்கு முன்பு பதிவில் இருந்த பதிவேட்டின் நகலையும், இந்த நிலத்தின் ஆரம்ப உரிமையாளராக இருந்த வயதான பெண்மணியிடம் இருந்து பெற்றப்பட்ட”**Sri Avittam Thirunaal Memorial Municipal Destitute Home Nagercoil**” என்ற பெயரில் மேற்படி இடத்தில் அனாதைமடம் கட்டுவதற்கு திருவிதாஙகூர் அரசு நாகர்கோவில் நகராட்சிக்கு ஒப்பளிப்பு அளித்து **5.11.1945–**ம் நாளிட்ட கடிதத்தின் நகலையும் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் காண்பித்து இந்த இடம் நகராட்சிக்குத்தான் சொந்தமானது என திட்டவட்டமாகத் தெரிவித்து, அரசு

பதிவுகளில் அரசு புறம்போக்கு என உள்ளதை நகராட்சியின் பெயருக்கு திருத்தம் செய்யக்கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் தாம் இதுபற்றி நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களிடம் பேசியுள்ளதாகவும் எவ்வித பாகுபாடுமின்றி பெயர்மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் அதற்கு நகராட்சியிலிருந்து ஒரு ( Requistion) கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் "அ" பதிவேட்டில் சாதரணமாக பெயர்மாற்றம் செய்ய இயலாது எனவும் அதற்கு ஒரு நடைமுறை (Producere) இருக்கிறது என்றும் ஒரு படிவத்தில் பூர்த்தி செய்து நில உரிமை மாற்றம் செய்ய (Alienation) வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதற்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் நகராட்சிக்கே சொந்தமான இடத்தை நகராட்சி நில உரிமை மாற்றம் செய்ய (Alienation ) கேட்க முடியாது எனவும், அரசு புறம்போக்கு என பதிவு செய்துள்ளதை நாகர்கோவில் நகராட்சி என பெயர்மாற்றம் செய்யக்கேட்டுக் கொண்டார். அதன் பின் 05.02.2010 அன்று அரசுச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்கள் மூலம் ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட அரசாணை நகல்கள் மற்றும் நீதிமன்றத்திலிருந்த செட்டில்மெண்ட்டுக்கு முன்பு இருந்த நிலப்பதிவேட்டின் நகல்கள், முந்தைய நில உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட திருவிதாங்கூர் அரசு நாகர்கோவில் நகராட்சிக்கு ஒப்பளிப்பு செய்த கடித நகல் மேற்படி இடத்திற்கான வரைபடத்தில், நகராட்சி பொதுபணி மேற்பார்வையாளர் (Overseer) கையொப்பம் பெற்றுள்ள வரைபடம் நகல் ஆகிய பல ஆவணங்களைக் கொண்டு மீண்டும் மாவட்ட வன அலுவலர் முன் ஆணையர் அவர்களால் ஆஜர் ஆகப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. உரிய உத்தரவு பிறப்பிப்பதாக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதியளிக்கப்பட்டது. ஆகவே மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலின் அடிப்படையிலும் சமர்ப்பிக்கப்பட்டஆவணங்களின் அடிப்படையிலும் "அ" பதிவேட்டில் அனாதைமடத்தின் உரிமை தொடர்பான பெயர் திருத்தம் செய்யக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் பரிந்துரையுடன் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் நே.மு.க.எண்.61723/2009/DP4 நாள் 03.04.2010—ன் படி மாவட்ட ஆட்சித்தலைவர் , கன்னியாகுமரி அவர்களுக்கு நேர்முக கடிதம் அனுப்பப்பட்டு தற்போது நினைவூட்டுகள் அனுப்பப்பட்டும் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

<u>பாதாள சாக்கடை திட்டம்</u>

மாவட்ட தலைநகரங்களில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கை ரீதியான முடிவின் படி, சிறப்பு நிலை நகராட்சியான இந்நகராட்சி கன்னியாகுமரி மாவட்டதின் தலைநகரமாக அமையப்பெற்றுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 49.10 சதுர கிலோ மீட்டர், மக்கள் தொகை 2011—ன் கணக்கீட்டின்படி 2,46,753 ஆகும்.

நாகர்கோவில் நகராட்சியில் உள்ள 52 வார்டுகளில் சுமார் 441.20 கிலோமீட்டர் சாலைகள் உள்ளது.

நாகர்கோவில் நகராட்சி பகுதி 9 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு முதல் பகுதியான 18 வார்டுகள் முழுவதுமாக 17 வார்டுகளில் பகுதியாகவும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.37/தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2012–ன் படி ரூ.79.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் ரூ.52.45 கோடிகள் மத்திய அரசு மானியமாகவும் ரூ.8.48 கோடி நகர்புற மேம்பாட்டு குழு முலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி செய்யும்பொருட்டு மத்திய மற்றும் மாநில அலுவலகத்திலிருந்து கீழ்கண்டுள்ளபடி நிதி பெறப்பட்டு, 2012–2013 முதல் பணி ஆரம்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) Govt.of India share 25% | - | 1311.30 |
| 2) Govt.of Tamil Nadu share | - | 163.91 |
| 3) IUDM Grant | | 380.00 |
| | | ------------- |
| | | 1855.21 |
| | | ------------ |

தற்போது குடிநீர் வடிகால் வாரிய 30.10.2014–ம் தேதிய அறிக்கைபடி கீழ்கண்டுள்ளபடி பணிகள் முடிவடைந்துள்ளது.

1) கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டது – 46960 மீட்டர்
2) சரள் இரண்டு குழாய்கள் (Manhole) - 2582 Nos
3) வீட்டு இணைப்புகள் (HSC) - 3556 Nos

<u>சாக்கடை திட்டம்</u>

நகரில் முக்கிய பகுதிகளில் திறந்த வடிகால்கள் உள்ளன. அவைகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. எல்லா வடிகால்களும் தினசரி சுத்தம் செய்யப்பட்டு கழிவு நீர் தேஙகாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது

<u>பொது சுகாதாரம் பலவகைப்பட்டவை.</u>

தீ விபத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கை.

அரசு தீயணைக்கும் படையினர் இந்நகரில் தீயணைப்பு பணி சேவை செய்து வருகின்றனர். நகராட்சி கட்டிடத்தில் தீ தடுப்பு முன் எச்சரிக்கையான வாளியில் மணல், தண்ணீர் முதலியனவும் மூன்று தீ தடுப்பு சாதனஙகளும் எப்போதும் தயாராக வைக்கப்பட்டு உள்ளது.

<u>நாய்கடி தடுப்பு</u>

மிருக வதை தடுப்பு தடைச்சட்டத்தின் கீழ் நாய்களை பிடித்து அழிப்பதற்கு அனுமதியில்லாத காரணத்தினால் தெருக்களில் உரிமம் இல்லாமல் அலையும் நாய்களை பிடித்து அரசு கால்நடை மருத்துவமனையில் கருத்தடை செய்து நாய்களை அதே இடத்தில் மீண்டும் விடப்பட்டு வருகிறது.

மேலும் அறிக்கையாண்டில் 392 பெண் நாய்களை பிடித்து இன விருத்தி கட்டுப்பாடு செய்யப்பட்டு உள்ளது. மூன்று நகர நலவாழ்வு மையஙகளிலும் நாய்கடி தடுப்பூசி போட (ARV) நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். என 31.08.2012 –ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் அறிவுரை வழஙகப்பட்டதை

தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண்.1357 நாள் 28.09.2012–ன் படி ரூ.5.00 லட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியில் மன்ற அனுமதி பெறப்பட்டு அறிக்கை ஆண்டில் முதல்கட்டமாக ரூ.1.00 லட்சத்திற்கு ARV மருந்துகள் Drug house Asaripallam, Kaniyakumari District –ம் வாஙகி பொதுமக்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

<u>பன்றி பிடித்தல்</u>

மிருக வதை தடுப்பு தடைச்சட்டத்தின் கீழ் பன்றிகளை பிடித்து அழிப்பதற்கு அனுமதியில்லாத காரணத்தினால் அறிக்கை ஆண்டில் அலைந்து திரியும் பன்றிகள் பிடித்து அழிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை

பொது சுகாதாரப்பிரிவில் சுகாதாரம் மற்றும் குப்பைகள் கழிவு நீர் ஒடை சுத்தம் செய்தல் சம்பந்தமாக பொது மக்களிடமிருந்து குறைந்த அளவே புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனுக்கள் மீது உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டுள்ளது.

<u>கொசு ஒழிப்பு நடவடிக்கை.</u>

இந்நகராட்சியில் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டத்தில் 1 முதல் 13 , 27 முதல் 37 மற்றும் 47 முதல் 48 ஆகிய 26 வார்டுகளில் இப்பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள வார்டுகள் தேசீய யானைக்கால் நோய் தடுப்புத் திட்ட அலகு மூலம் செயல்பட்டு வருகிறது. சுகாதார ஆய்வாளர் அவர்களின் மேற்பார்வையில் ஒரு களப்பணி உதவியாளரும் காலியிடஙகள் 12 மஸ்தூர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் இப்பகுதியில் கொசு புளு நாசினி வாறுகால்களில் பெந்தியான் 82.5ரூ–ம் நல்ல நீரில் டெமிபாஸ் 50ரூ–ம் இ.சி தெளிக்கப்பட்டுள்ளது. முதிர்ந்த கொசுக்களை அளிக்க புகை மருந்து, பெட்ரோல், டீசல், பெட்ரோல் மற்றும் வைத்திரம் 2 % ஆகியவை கலந்து அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ‘‘டெஙகு‘‘ காய்ச்சல் பரவி இருந்ததை அறிந்து இந்நகராட்சி முன்னோடியாக முதிர்ந்த கொசுக்களை அழிக்க ராட்சச இயந்திரம் மூலம் புகை மருந்து அடிக்கப்பட்டது.

மேலும் கொசுவின் உற்பத்தியை கட்டுப்படுத்தும் கட்பீஸ் , கம்பூஸியா என்னும் மீன்கள் நகராட்சி மேல் நிலை நீர் தாஙகி வளாகத்தில் வளர்க்கப்பட்டு பொதுமக்களுக்கு நீர் தேஙகியுள்ள இடஙகளில் விடுவதற்கு இலவசமாக வழஙகப்படுகிறது. கழிப்பிட நச்சுத் தொட்டியின் காற்று போக்கியில் கொசுக்கள் உற்பாத்தியாகாதவாறு தடுக்க சுகாதார பணியாளர்களின் (மஸ்தூர்) மூலம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிக்காக 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>குடும்ப நலம்.</u>

இந்நகராட்சியில் குடும்ப நலப் பணிக்காக மூன்று டைப் – டி, நகர்நல வாழ்வு நிலையஙகள் 31–03–2001 ம் தேதிய அரசு ஆணை எண். 136 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் திட்டத்தின் கீழ் இயஙகி வருகிறது. மேற்படி நகர் நல வாழ்வு நிலையஙகள் அமைந்துள்ள இடஙகள் பின் வருமாறு.

வெட்டூர்ணிமடம் நகர் நல வாழ்வு நிலையம் டைப் . டி ( இருப்பு கிருஷ்ணன்கோவில் )டவுண் நலவாழ்வு நிலைம் ( டைப் – டி ) இருப்பு வடிவீஸ்ரம்
வட்டவிளை நகர்நல வாழ்வு நிலையம், டைப் – டி ( இருப்பு – இடலாக்குடி ) 30–06–2001ம் தேதிய கணக்கெடுப்பின்படி மேற்படி நிலையஙகளால் பராமரிக்கப்படும் மக்கள் தொகை வருமாறு.

| | | மக்கள் தொகை 2012–2013 | மக்கள் தொகை 2013– 2014 |
|---|---|---|---|
| 1 | வெட்டூர்ணிமடம் நகர் நல வாழ்வு நிலையம் | 80804 | 81758 |
| 2 | டவுண் நல வாழ்வு நிலையம், வடிவீஸ்வரம் | 82372 | 84943 |
| 3 | வட்டவிளை நல வாழ்வு நிலையம் | 84579 | 84943 |
| | மொத்தம் | 241939 | 249433 |

## நலவாழ்வு நிலைய வாரியாக பணியாளர்கள் விவரம்

| வ. எண் | | பெண் மருத்துவ அலுவலர் | நகர சுகாதார செவிலியர் | உதவி யாளர் | பகுதி சுகாதார செவிலியர் |
|---|---|---|---|---|---|
| 1 | வெட்டுர்ணிமடம் நகர நல வாழ்வு மையம் | 1 | 5 | – | 1 பெ.அ.உ– இல்லை |
| 2 | வட்டவிளை | 1 | 5 | – | 1 பெ.அ.உ– இல்லை |
| 3 | டவுண் நல வாழ்வு நிலையம் | 1 | 7 | 1 | பெ.அ.உ. 1 செவிலியர்.1 |
| 4 | வட்டவிளை மகப்பேறுநிலையம் | மகப்பேறு உதவியாளர் 4 | மகப்பேறு ஆயா 4 | – | உடனாள் 1 |

## குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நலத்திட்டத்திற்காக 2010– 2011 ம் வருடத்திற்கு இந்நகராட்சிக்கு நிர்ணகிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அடைந்த சாதனையும்

## குடும்ப நலத் திட்டம்

| வரிசை எண் | Family Welfare Sterilisation | (2013–2014) –ம் வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | அடைந்த சாதனை Achievment | சாதனை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அறுவை சிகிட்சை | 1216 | 837 | 65 % |
| 2 | காப்பர் டீ | 1080 | 477 | 44 % |
| 3 | ஊட்கொள்ளும் மாத்திரை | 546 | 506 | 92.6% |
| 4 | நிரோத் | 432 | 463 | 107 % |

ஆ. தாய் சேய் நலத் திட்டம்.

| வரிசை எண் | வகை | திட்ட இலக்கு | திட்ட அளவு | விகிதசாரம் |
|---|---|---|---|---|
| 1 | பி.சி.ஜி. தடுப்பு ஊசி | 2343 | 2279 | 20.99 % |
| 2 | டி.பி.ற்றி | 2343 | 2326 | 20.97% |
| 3 | போலியோ | 2343 | 2326 | 20.97% |
| 4 | துட்டம்மை | 2343 | 2313 | 21.38% |
| 5 | டி.ற்றி. | 2343 | 2217 | 19.88 % |
| 6 | ற்றி.ற்றி.(கர்ப்பிணி தாய்) | 2460 | 2532 | 21.77 % |

சுகாதாரம் மற்றும் குடும்பநல பிரச்சாரம்

சுற்றுப்புற சுகாதாரம் , எய்ட்ஸ் நோய் தடுப்பு , காலரா நோய் தடுப்பு, குடும்ப நலம், தாய் சேய் நலம், குழந்தைகளுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான தடுப்பூசி ஆகியவைப் பற்றி சுவரொட்டிகள் துண்டு பிரசுரங்கள் திரைப்பட காட்சி மற்றும் பேனர்கள் சினிமா சிலைடுகள் மூலமும் சிறு குழு கூட்டங்கள் சிறப்பு முகாம்கள் ஆகியவை நடத்தியும் தினசரி பத்திரிகைகள் மற்றும் நாகர்கோவில் அகில இந்திய வானொலி மூலமும் சிறப்பு பிரச்சாரமும் செய்யப்பட்டது.

சுகாதாரம் மற்றும் குடும்பநல பிரச்சாரத்திற்காக அறிக்கை ஆண்டில் நடத்தப்பட்ட தகவல் கல்வி தொடர்பு பணிகள் கீழ் வருமாறு.

1. சிறுகுழு கூட்டங்கள் 411
2. சிறப்பு தடுப்பூசி முகாம் 1
3. பல்ஸ் போலியோ தடுப்பு முகாம் 2
4. இலவச மருத்துவ முகாம் 3
5. உலக சுகாதார தினவிழா 1
6. சுவரொட்டிகள் 50
7. துண்டு பிரசுரங்கள் 5000

அறிக்கை ஆண்டில் திருமதி. பு. ஜானகிஇரவீந்திரன் எம்.எஸ்.ஸி,பி.எட்., ஆணையர் அவர்கள் மேற்பார்வையிலும் மேற்படி திட்டங்கள் செயல் படுத்தப்பட்டது.

கண்புரை மருத்துவ முகாம் அடைந்த சாதனை

இந்நகராட்சியில் 2012 – 2013 கண்புரை மருத்துவ முகாம் வடிவீஸ்வரம், கிருஷ்ணன்கோவில், வட்டவிளை நகர்நல வாழ்வு மையங்களில் சிறப்பாக நடத்தப்பட்டது.

| நகரநலவாழ்வு மையம் | 2013–2014 |
|---|---|
| வடிவீஸ்வரம் | 21 |
| வட்டவிளை | 14 |
| கிருஷ்ணன்கோவில் | 36 |

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் 2013–2014–ம் ஆண்டின்பயன் அடைந்தோர் எண்ணிக்கை – 987பேர்

<u>பள்ளி நலத் திட்டம்</u>

பள்ளி மாணவர்களின் உடல் நிலையை பரிசோதித்து தக்க மருத்துவ ஆலோசனையும் மருந்தும் கொடுத்து அவர்கள் உடல் நலம் பேன ஒரு மருத்துவரும் இரண்டு பகுதி சுகாதார செவிலியரும் 18–5–91 நாளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு ஆணை எண். 851 ன் படி இந்நகராட்சியில் நியமனம் செய்யப்பட்டு பணி புரிந்து வருகிறார்கள். பகுதி நேர சுகாதார செவிலியர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

மருத்துவ அலுவலர் 1

பகுதி சுகாதார செவிலியர் 2

அலுவலக உதவியாளர் 1 (பணியிடம் காலியாக உள்ளது)

நாகர்கோவில் நகராட்சி பகுதியில் 74 பள்ளிகள் உள்ளன.

2013 – 2014 ம் வருடத்தில் 74 பள்ளிகளிலும் மாணவ மாணவிகளுக்கு தமிழக முதல்வரின் பள்ளி சிறார் நல வாழ்வு இலவசமாக மருத்துவ பரிசோதனை செய்யப் பட்டது. இம்மருத்துவ முகாம் அரசு தொடக்கப் பள்ளி வடிவீஸ்வரத்தில் நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது. மொத்தம் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 35864 பரிசோதனை செய்யப்பட்ட மாணவ மாணவியர்கள் 33802 மேல் சிகிட்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். 811 பள்ளி சிறார் வாழ்வுத் திட்டத்தில் பொது சுகாதாரப் பிரிவைச் சார்ந்த அனைத்து பணியாளர்களும் முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

<u>குடும்பநலம் மற்றும் தாய் சேய் நலப் பணிகள்</u>.

குடும்பநலப் பணியாளர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நலப் பணிகளை செய்கிறார்கள். வீடு வீடாகச் சென்று குடும்ப நலம், தாய் சேய் நலம், குறிப்பாக தடுப்பு ஊசி திட்டம் பற்றி ஊக்குவிக்கப்பட்ட தாய்மார்களை அறுவை சிகிட்சைக்கு அல்லது காப்பர் டி பொருத்துவதற்காக அழைத்துச் செல்வது தகுதி வாய்ந்த தாய்மார்களுக்கு உட் கொள்ளும் மாத்திரை வழஙகுதல், தாய் மார்கள் மூலம் நிரோத் வழஙகுதல் அறுவை சிகிட்சை செய்து கொண்ட தாய்மார்களுக்கு குறிப்பிட்ட காலஙகளில் பின் தொடர் கவனிப்பு பணி செய்தல், சிறு நோய்களுக்கு சிகிட்சை அளித்தல். இதர நோய்களுக்கு மருத்துவமனை அழைத்து செல்வது. கர்ப்பிணி தாய்மார்கள் ற்றி.ற்றி.தடுப்பூசி போடுதல் . கர்ப்ப காலப் பராமரிப்பு குழந்தைகளுக்கு பி.சி.ஜி.டி.பி.ற்றி. போலியோ தட்டம்மை டி.ற்றி. ஆகிய தடுப்பு ஊசிக்கும் போலியோ

சொட்டு மருந்து புதன் கிழமை தோறும் வழஙகுதல். சிறு குழு கூட்டஙகள், முகாம்கள் ஆகியவை நடத்துவதற்கான ஏற்பாடு செய்தல். குழந்தைகளுக்கு இரும்பு சத்து மற்றும் வைட்டமின்'A' திரவம் வழஙகுதல். தாய்மார்களுக்கு இரும்பு சத்து மாத்திரை வழஙகுதல் கை, கால், பல் , இலவசம் ஆண் அறுவை சிகிட்சைக்கு ஊக்குவித்தல், மலேரியா, அம்மை நோய், காலரா, காச நோய், தொழுநோய் ஆகிய தொத்து நோய்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட பொது சுகாதார அதிகாரிக்கு தகவல் கொடுத்தல். பிறப்பு , இறப்பு கண்டுபிடித்து பதிவு செய்தல், மேலும் அதிகாரிகள் அறிவுரைப்படி குடும்ப நலத் திட்டம், தாய் சேய் நலம், பொது சுகாதார முன்னேற்றத்திற்கான பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

<u>பிறப்பு, இறப்பு விகிதம் மகப்பேறு வசதியும்</u>

இப்பிரிவில் துப்புரவு ஆய்வாளர் பதவியுடன் பிறப்பு, இறப்பு பதிவாளர் 15 பேர் பணி புரிந்து வருகின்றனர்.

| வரிசை எண் | பிறப்பு , இறப்பு பதிவாளர் அலுவலக இருப்பிடத்தின் பெயர் | பதிவு செய்யப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிருஷ்ணன்கோவில் | 3, 4, 5, 6, 7, 28, 29, 31 |
| 2 | வடசேரி | 8, 9, 10, 32, 33, 34 |
| 3 | நகராட்சி அலுவலகம் | 11, 12, 30, 35, 36, 37, 48 |
| 4 | வாட்டர் டாங்க் | 1, 2, 26,, 27, 47 |
| 5 | அனாதைமடம் 1 | 44, 46, 49, 50, 51 |
| 6 | அனாதைமடம் 2 | 23, 24, 25, 45 |
| 7 | வடிவீஸ்வரம் | 13, 14, 38, 39, 40 |
| 8 | கோட்டார் 1 | 15, 16, 17 |
| 9 | கோட்டார் 2 | 18, 41, 42, 43 |
| 10 | ஆசாரிபள்ளம் | 19, 20, 21, 22 |

மேற்கண்டுள்ள நிலையஙகளிலிருந்து 3287 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசியும் 3047 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத தடுப்பு சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டது.

| | தடுப்பூசி | போலியோ |
|---|---|---|
| வட்டவிளை | 627 | 638 |
| வடிவீஸ்வரம் | 719 | 679 |
| கிருஷ்ணன்கோவில் | 831 | 780 |
| | | |

<u>பிறப்பு, இறப்பு, பதிவு மற்றும் கொள்ளை நோய்கள் விவரம்</u>

| | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| வரிசை | நிகழ்வு | பதிவு | விகிதம் | பதிவு | விகிதம் |
| | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பிறப்பு | 13205 | 10.42 | 12686 | 10.12 |
| 2 | இறப்பு | 3554 | 4.6 | 3838 | 4.8 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | சிசுமரணம் | 140 | 0.46 | 139 | 0.44 |
| | நோயகள் | 2012 | | 2013 | |
| 1 | காலரா | – | – | – | – |
| 2 | பெரியம்மை | – | – | – | – |
| 3 | மலேரியா | 4 | – | – | – |
| 4 | காய்ச்சல் (நிமோனியா) | – | – | – | – |
| 5 | வெறிநாய் | 1 | – | 4 | – |
| 6 | வயிற்று போக்கு | – | – | – | – |
| 7 | சுவாசம் சம்மந்தமானவை | 732 | – | 821 | –. |
| 8 | இதர நோய்கள் | 2817 | – | 3013 | – |
| | மொத்தம் | 3554 | | 3538 | – |

<u>சொர்ணஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் (SJSRY)</u>

நகர்புற வறுமையை ஒழிப்பதற்காக மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தப்பட்டு வரும் சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் 1–12–97 லிருந்து தொடஙகப்பட்டு தொடர்ந்து அறிக்கை ஆண்டிலும் செயல்பட்டு வருகிறது. (அரசு நே.மு.க.எண். 11019/93 எஸ்.ஐ.நு.பி.ஊ.) நாள் 11–9–97 எஸ்.ஆர்.ஒய்.யு.பி.பி. மற்றும் பி.எம்.ஐ.யு.பி.எஸ்.பி. ஆகிய திட்டஙகள் 30–11–1997 ல் முடிக்கப்பட்டு சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் என மாற்றப்பட்டது.

மிகவும் வறுமை கோட்டிற்குட்பட்ட பயனாளிகளை தேர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண், 48786/2003/வெப்1 நாள் 9/9/2003.ம் தேதிய கடிதப்படி 29/09/2003 முதல் 18/12/2003 முடிய வறுமை கோட்டிற்கு உட்பட்ட குடியிருப்புகள் கணக்கெடுக்கப்பட்டது

வறுமை கோட்டிற்கு உட்பட்ட குடியிருப்புகள் (புதிதாக நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுயும் சேர்த்து ) } 20,049

சொர்ண ஜெயந்தி திட்டம் 2013–2014 நிதியாண்டிற்கு மொத்தம் 1,13,96,353/–நிதி மத்திய அரசும், மாநில அரசும் 75.25 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியினை சொர்ண ஜெயந்தி திட்ட கீழ்கண்ட அலகுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

<u>I. நகர்புற சுயவேலைவாய்ப்புத்திட்டம் திறன் வளர்ப்பு மேம்பாட்டு பயிற்சி (Step-up)</u>

| | |
|---|---|
| 1 | 2013-2014 நிதியாண்டிற்கு ரூ.5996628 நிதி ஒதுக்கப்பட்டு பயிற்சி தொகையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மூலமாக பயிற்சி நிறுவனஙகளுக்கு வழஙகப்பட்டு வருகின்றன |

| | |
|---|---|
| 2 | Computer fundamental, MS office, DTP, internet & Soft skills, Tally Web Desiging, HW & Networking, Autocad, Cell phone service, Tailoring, Hand Embroidering, Fashion Technology, Basic Beauty & Hair dressing Electrician போன்ற பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3. | 885 பயனாளிகளுக்கு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன, |
| 4 | வேலைவாய்ப்புடன் கூடிய மேற்படி பயிற்சியானது 18 முதல் 45 வயதுக்குட்பட்ட ஏழை பயனாளிகளுக்கு கீழ்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு 7 பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடைபெற்று வருகின்றன. |

| | பயிற்சி நிறுவனத்தின் பெயர் | முயிற்சியின் பெயர் |
|---|---|---|
| a) | **India skills CED நாகர்கோவில்** | Basic Beauthy and Hair dressing<br>Make-up Artist |
| b) | **Micro ITI, Nagercoil** | Tailoring,Hand Embroides, Eectrician |
| c) | **RSK Krishnancoil** | Computor Oriented courses |
| d) | **Rlex solutions,Nagercoil** | Computer Oriented courses |
| e) | **CIFT ,Nagercoil** | Fashion Technology |
| f) | **CSC,Nagercoil** | Computer Oriented courses |
| g) | **CSC,Parvathipuram** | Computer Oriented courses |

**<u>II. நகர்புர சுய வேலை வாய்ப்புத் திட்டம் (USEP)</u>**

**நகர்புறத்தில் வறுமைகோட்டில் வசிக்கும் பயனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பை பெருக்கி வாழ்க்கை தரத்தை முன்னேற்ற வழிவகை செய்யும் திட்டமாகும். இந்நகராட்சியில் 2013–2014 வருடத்திற்கான தொகை ரூ.1689392/- பெறப்பட்டுள்ளது.**

**நகராட்சி பகுதியில் வறுமை கோட்டின் கீழ் வாழும் தனி நபர்க்கு பல்வேறு தொழில்களுக்காக வங்கிகள் வாயிலாக இக்கடன் 25% மானியத்துடன் வழஙகப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 159 விண்ணப்பஙகள் வஙகிகளுக்கு அனுப்பப்பட்டு அதில் 72 பயனாளிகளுக்கு கடன் வழஙகப்பட்டுள்ளது.**

**III. நகர்புற பெண்கள் சுய வேலைவாய்ப்பு திட்டம் குழு கடன் (UWSP –Group Loan)**

**நகர்புறத்தில் வசிக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு லாபகரமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தர உதவி செய்தல் இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும். 2013–2014 வருட ஒதுக்கீடு தொகையாக ரூ.854214– பெறப்பட்டு நகராட்சிக்குட்பட்ட வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு அவர்களில் தொழில் வளர்ச்சிக்கு வஙகி வழியாக மானியத்துடன் கடன் தொகை வழஙகப்பட்டுள்ளது.**

**IV.** நகர்புற பெண்கள் சுய உதவி திட்டம்

சிக்கணம் மற்றும நாணய சஙகம் ( சுழல் நிதி) **UWSP – TCS (RF)**

**2013-2014 ஆண்டுக்கு 31 சிக்கனம் மற்றும் நாணய சஙக குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.5628010/- வழஙகப்பட்டுள்ளது.**

**V.** நகர்புற சமூக அமைப்பு ( **UCDN)**

2013–2014–ஆம் ஆண்டில் சமூக அமைப்பிற்கு மத்திய, மாநில அரசிடமிருந்து, வரப்பெற்ற தொகை ரூ.1350724/- ஆகும். இந்த அலகின் கீழ் 1500 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் 500 துப்புரவு பணியாளர்களுக்கும் மது மற்றும் போதை அடிமைகள் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டுள்ளது. **C-Dot** நிறுவனத்தின் மூலம் 350 பயனாளிகளுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு சமூக விழிப்புணர்வு கூட்டஙகள் நடைபெற்று வருகின்றன.

<u>அறிக்கை ஆண்டில் ஓய்வு பெற்றோர் விபரம்</u>

1. பொதுப்பிரிவு – 2
2. வருவாய் பிரிவு – 2
3. பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு– இல்லை
4. பொது சுகாதார பிரிவு – 1
5. நகரமைப்பு பிரிவு – இல்லை

<u>பொதுக்குறிப்பு</u>

நகராட்சியின் அனைத்து பணிகளும் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்ற தீர்மானஙகளின் பேரில் அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற்றுவருகிறது. அனைத்து மன்ற உறுப்பினர்கள், நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆகியோர் நகராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெற அனைத்து ஒத்துழைப்புகளையும் தேவைப்படும் நேரஙகளில் அறிவுரைகளும் நல்கி வந்தமைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். பொறியர், நகர்நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், மேலாளர், வருவாய் அலுவலர், கணக்கர் மற்றும் அனைத்து பிரிவு பணியாளர்களும் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்பு தந்தமைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர் (பொ)
நாகர்கோவில் நகராட்சி